22031



ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2026
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2026
General Certificate of Education (Adv. Level) Examination, 2026

භූගෝල විද්‍යාව I
புவியியல் I
Geography I

**22 T I**

පැය තුනයි
*மூன்று மணித்தியாலம்*
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

**வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

சுட்டெண் : ....................................

**அறிவுறுத்தல்கள் :**

- ※ இவ்வினாத்தாள் **மூன்று** பகுதிகளைக் கொண்டது. பகுதி **I, 40** பல்தேர்வு வினாக்களைக் கொண்டுள்ளது. அவற்றுக்கான விடைகள் **இவ்வினாத்தாளிலேயே** எழுதப்பட வேண்டும்.
- ※ பகுதி **I** இல் ஒவ்வொரு சரியான விடைக்கும் **ஒரு** புள்ளி வீதம் உரித்தாகும்.
- ※ பகுதி **II** இல் உள்ள **இரண்டு** வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.
- ※ பகுதி **III** இல் நான்கு வினாக்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் **இரண்டு** வினாக்களைத் தெரிவுசெய்து விடையளித்தல் வேண்டும்.
- ※ பகுதி **I**, பகுதி **II**, பகுதி **III** ஆகியவற்றுக்குரிய விடைத்தாள்கள் ஒன்றாக இணைக்கப்பட்டு கையளிக்கப்படல் வேண்டும்.

பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும்

| | ப.இல | வினா இல. | புள்ளிகள் |
|---|---|---|---|
| பகுதி I | 2 | 1 - 10 | |
| | 3 | 11 - 19 | |
| | 4 | 20 - 29 | |
| | 5 | 30 - 38 | |
| | 6 | 39 - 40 | |
| பகுதி II | | 1 | |
| | | 2 | |
| பகுதி III | | 3 | |
| | | 4 | |
| | | 5 | |
| | | 6 | |
| மொத்தம் | | | |

| | குறியீட்டு எண் | கையொப்பம் |
|---|---|---|
| 1 ஆவது பரீட்சகர் | | |
| 2 ஆவது பரீட்சகர் | | |
| மேலதிக பிரதம பரீட்சகர் | | |
| எண்கணிதப் பரிசோதகர் | | |
| பிரதம பரீட்சகர் | | |

[பக். 2 ஐப் பார்க்க

Past Papers Wiki



## பகுதி I

- ஒவ்வொரு வினாவுக்குமான சரியான விடையினைக் கொண்டிருக்கும் தெரிவினைத் தெரிவுசெய்து, அதற்குரிய **இலக்கத்தினை** எதிரேயுள்ள **புள்ளிக்கோட்டில்** எழுதுக.

**1.** புவியியல் தகவல் முறைமையில் (GIS) சேமித்து வைக்கப்படும் இரண்டு தரவு வடிவங்கள்
(1) காவித் தரவு மற்றும் இலக்கமுறைத் தரவு
(2) இடஞ்சார் தரவு மற்றும் இடஞ்சாராத் தரவு
(3) காவித் தரவு மற்றும் பரவல் தரவு
(4) இடஞ்சார் தரவு மற்றும் பரவல் தரவு
(5) இலக்கமுறைத் தரவு மற்றும் இடஞ்சாராத் தரவு (……)

**2.** பூகோள இடநிலைப்படுத்தல் முறைமையுடன் (GPS) தொடர்புபட்ட செய்மதித் தகவல்களைப் பெறுவதற்கான தலைமைக் கட்டுப்பாட்டு மையம் அமைந்திருக்கும் இடம் யாது?
(1) கொலராடோ (2) டியாகோகாஷியா
(3) அசென்ஸன் (4) ஹாவாய்
(5) குவாஜலின் (……)

**3.** பூகோள இடநிலைப்படுத்தல் முறைமையில் அமைவிடத் தகவலைத் துல்லியமாகப் பெறுவதற்கு வான்வெளிக்குச் செலுத்தப்படும் வழமையான மற்றும் அவசரகால மொத்தச் செய்மதிகளின் எண்ணிக்கை யாது?
(1) 07 (2) 20 (3) 24 (4) 31 (5) 36 (……)

**4.** இரண்டு பகுதிகளை இணைத்தவாறு காட்டும் 1:50 000 இடவிளக்கப்படத்தின் பெயரைக் காட்டும் தெரிவு
(1) பொத்துவில் மற்றும் கோமாரி (2) புத்தல மற்றும் பாணம
(3) கதிர்காமம் மற்றும் யால (4) மகா ஓயா மற்றும் பட்டிருப்பு
(5) படியத்தலாவ மற்றும் அம்பாறை (……)

**5.** பின்வரும் தெரிவுகளில், இலங்கையின் 1:50 000 இடவிளக்கப்படத்தில் காணப்படும் கரையோர பௌதிக அம்சங்கள் மூன்றினைச் சரியாகக் காட்டுவது எது?
(1) கடனீரேரி, குடா மற்றும் மியாந்தர்
(2) தீவு, மியாந்தர் மற்றும் பின்னலாறு
(3) நீர்ப்பிரிப்பு, மணல்மேடு மற்றும் கழிமுகம்
(4) கடனீரேரி, குடா மற்றும் பின்னலாறு
(5) கழிமுகம், தீவு மற்றும் கடனீரேரி (……)

**6.** வருடமொன்றுக்குப் பூகோளப் பச்சைவீட்டு வாயுக்களை உருவாக்கும் பல்வேறு மானிட நடவடிக்கைகளை எடுத்துக் காட்டுவதற்குப் பொருத்தமான வரைபு முறை யாது?
(1) எளிய கோட்டு வரைபு (2) வட்ட வரைபு
(3) இரட்டை பார் வரைபு (4) கூம்பக வரைபு
(5) பல்கோட்டு வரைபு (……)

**7.** பின்வரும் எந்தத் தெரிவு தொடர்ச்சியான தரவு மற்றும் பின்னகத் தரவு ஆகியவற்றுக்கான உதாரணங்களை முறையே சரியாக எடுத்துக்காட்டுகின்றது?
(1) வகுப்பொன்றில் குழந்தைகளின் உயரம் மற்றும் மாவட்டமொன்றில் கிராமங்களின் எண்ணிக்கை
(2) நகரமொன்றில் நாளாந்த வெப்பநிலை மற்றும் வகுப்பொன்றில் குழந்தைகளின் நிறை
(3) வகுப்பொன்றில் குழந்தைகளின் எண்ணிக்கை மற்றும் பிரதேசமொன்றில் குளங்களின் எண்ணிக்கை
(4) நகரமொன்றின் மாதாந்த மழைவீழ்ச்சி மற்றும் நகரமொன்றின் நாளாந்த வெப்பநிலை
(5) நாடொன்றில் நகரங்களின் எண்ணிக்கை மற்றும் நகரமொன்றின் நாளாந்த வெப்பநிலை (……)

**8.** இடமொன்றின் பௌதிக மற்றும் பண்பாட்டு அம்சங்களுக்கு இடையிலான தொடர்பினை எடுத்துக் காட்டும் படம் எது?
(1) இடகணியப் படம் (2) சமகணியப் படம் (3) புள்ளிப் படம்
(4) இடவிளக்கப் படம் (5) கருப்பொருட் படம் (……)

**9.** 1:50 000 இடவிளக்கப் படத்தின் தாளில் உள்ளடக்கப்பட்டுள்ள படப் பகுதியின் அளவு சதுரக் கிலோ மீற்றரில் ($km^2$) எவ்வளவு?
(1) 1300 (2) 1200 (3) 1100 (4) 1000 (5) 800 (……)

**10.** இடையுடன் தொடர்புபட்ட தரவுப் பெறுமானங்களைக் கொண்ட தொகுதியொன்றில் சிதறலின் அளவினைக் கணிப்பிடும் புள்ளிவிவர அளவீடு
(1) கீழ் காலணை (2) மீடிறன் (3) இடையம்
(4) வீச்சு (5) நியம விலகல் (……)

[பக். 3 ஐப் பார்க்க

**11.** புவியியல் ஆய்வில் புவிமேற்பரப்பின் பரப்பியல் வேறுபாடு பற்றிய அணுகுமுறையினை அறிமுகம் செய்தவர் யார்?
(1) அலெக்சாண்டர் வொன் ஹம்போல்ட் (2) கார்ல் றிற்றர் (3) அல்பிரட் ஹெட்னர்
(4) ரிச்சர்ட் ஹார்ட்சோன் (5) பிரட்றிச் ரட்சல் (......)

**12.** முதலாம் ஒழுங்கு, இரண்டாம் ஒழுங்கு மற்றும் மூன்றாம் ஒழுங்கு நிலவுருவங்களை முறையே சரியாகக் குறித்துக் காட்டும் மூன்று உதாரணங்கள்
(1) ஆசியாக் கண்டம், இமாலய மலைத்தொடர் மற்றும் நயாகரா நீர்வீழ்ச்சி
(2) மிசிசிப்பி பள்ளத்தாக்கு, ஆபிரிக்காக் கண்டம் மற்றும் அந்தீஸ் மலைத்தொடர்
(3) நயாகரா நீர்வீழ்ச்சி, பெரிய ஆற்றுக்குடைவு மற்றும் ஐரோப்பியக் கண்டம்
(4) றொக்கி மலைத்தொடர், அவுஸ்திரேலியாக் கண்டம் மற்றும் பசிபிக் சமுத்திரம்
(5) அந்தீஸ் மலைத்தொடர், மிசிசிப்பிப் பள்ளத்தாக்கு மற்றும் அந்தாட்டிக்காக் கண்டம் (......)

**13.** பாறைகளை அவற்றின் உருவாக்கத்தின் அடிப்படையில் பாகுபடுத்தப்பட்ட மூன்று பிரதான வகைகளைச் சரியாக எடுத்துக் காட்டும் தெரிவு யாது?
(1) தீப்பாறை, காபரோ மற்றும் பசோல்ட் பாறை
(2) கருங்கல், பசோல்ட் பாறை மற்றும் அடையல் பாறை
(3) பளிங்குருப்பாறை, சேதனப்பாறை மற்றும் உருமாறிய பாறை
(4) தலையீட்டுப்பாறை, உள்ளீட்டுப்பாறை மற்றும் அடையல் பாறை
(5) தீப்பாறை, அடையல் பாறை மற்றும் உருமாறிய பாறை (......)

**14.** புவியின் கற்கோளத்தில் புவியோட்டு விருத்திக்குரிய மூன்று பிரதான தகடுகளைச் சரியாக எடுத்துக் காட்டும் தெரிவு யாது?
(1) பசிபிக் தகடு, வட அமெரிக்கத் தகடு மற்றும் ஆபிரிக்கத் தகடு
(2) பசிபிக் தகடு, அராபியன் தகடு மற்றும் நஸ்கா தகடு
(3) கொக்கோஸ் தகடு, வட அமெரிக்கத் தகடு மற்றும் யூரேசியன் தகடு
(4) பசிபிக் தகடு, தென் அமெரிக்கத் தகடு மற்றும் கொக்கோஸ் தகடு
(5) அந்தாட்டிக் தகடு, நஸ்கா தகடு மற்றும் இந்தோ - அவுஸ்ரேலியத் தகடு (......)

**15.** சக்திக் கனியங்கள், உலோகக் கனியங்கள் மற்றும் உலோகமல்லாத கனியங்கள் ஆகியவற்றுக்கான மூன்று உதாரணங்களை முறையே சரியாக எடுத்துக் காட்டும் தெரிவு யாது?
(1) முற்றா நிலக்கரி, தோரியனைற் மற்றும் மொனசைட்
(2) மணல், களி மற்றும் இரத்தினக்கல்
(3) இரும்புப் படிவு, செம்பு மற்றும் மக்னீசியம்
(4) முற்றா நிலக்கரி, இரும்புப் படிவு மற்றும் மணல்
(5) நிக்கல், குறோமியம் மற்றும் சிலிக்கன் (......)

**16.** வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள, ஆற்றரிப்பினால் உருவாக்கப்பட்டுள்ள நிலவுருவம் யாது?



(1) தட்டை உச்சி ஓங்கல் (2) மலையிடுக்கு
(3) பானைக் குழிவுகள் (4) பீடக்கிடைத் திணிவுகள்
(5) லாப்பீஸ் (......)

PAST PAPERS WIKI

**17.** நிலக்கரி அதன் தோற்றத்தின் அடிப்படையில் பின்வரும் பாறைகளில் எந்த வகையைச் சேர்ந்ததாகப் பாகுபடுத்தப்படுகின்றது?
(1) அமிலத் தீப்பாறைகள் (2) இரசாயன ரீதியாகப் படிந்துள்ள அடையல் பாறைகள்
(3) உருமாறிய பாறைகள் (4) பிரிந்தழிந்த தீப்பாறைகள்
(5) சேதன அடையல் பாறைகள் (......)

**18.** புவிநடுக்கங்கள் இடம்பெறுவதற்கான காரணம்
(1) புவியின் மேற்பரப்புக்கு கீழேயுள்ள பாறைகள் படிப்படியாகக் குளிர்ச்சியடைதல்
(2) புவியைச் சுற்றி சந்திரனின் சுழற்சி
(3) புவியோட்டின்கீழ் உருகிய பாறைகளில் சேமித்து வைக்கப்பட்ட சக்தியின் சடுதியான வெளியேற்றம்
(4) புவியின் உள்ளே கனியங்களின் தொடர்ச்சியான உருவாக்கம்
(5) புவி மேற்பரப்பில் தீப்பாறை மற்றும் உருமாறிய பாறைகளின் உருகல் (......)

**19.** நிலத்திலிருந்து கடலை நோக்கி அமைந்திருக்கும் கரையோர வெட்டுமுகத்தின் நான்கு பகுதிகளை முறையே சரியாக எடுத்துக் காட்டும் தெரிவு யாது?
(1) பின் கடற்கரை, முன் கடற்கரை, அண்மித்த கடற்கரை மற்றும் அப்பாற்பட்ட கடற்கரை
(2) பின் கடற்கரை, அண்மித்த கடற்கரை, முன் கடற்கரை மற்றும் அப்பாற்பட்ட கடற்கரை
(3) முன் கடற்கரை, பின் கடற்கரை, அப்பாற்பட்ட கடற்கரை மற்றும் அண்மித்த கடற்கரை
(4) அண்மித்த கடற்கரை, அப்பாற்பட்ட கடற்கரை, பின் கடற்கரை மற்றும் முன் கடற்கரை
(5) அப்பாற்பட்ட கடற்கரை, அண்மித்த கடற்கரை, முன் கடற்கரை மற்றும் பின் கடற்கரை (......)

[பக். 4 ஐப் பார்க்க

Past Papers Wiki



**20.** தொலினா (புனற் பள்ளம்) என்னும் நிலவுருவம் எதனால் உருவாக்கப்படுகின்றது?
(1) காற்றின் செயற்பாட்டினால் (2) காசித்து செயன்முறையினால்
(3) பனிக்கட்டிக்குரிய அரித்தலினால் (4) எரிமலை நடவடிக்கையினால்
(5) ஆற்றின் படிதலினால் (......)

**21.** பின்வரும் தெரிவுகளில் பாறைக்குழம்பு நீரினைச் சரியாக விவரிப்பது எது?
(1) வளிமண்டலத்தில் நீராவியாகக் காணப்படும் நீர்
(2) புவிமேற்பரப்பிலிருந்து மண்ணுக்குள் ஊடுவடியும் நீர்
(3) வெப்பமான நீர் ஊற்றுக்களில் காணப்படும் நீர்
(4) புவியினுள் ஊடுபரவிச்செல்லும் நீர்
(5) அடையல் படைகளுக்கு இடையில் படிந்துள்ள நீர் (......)

**22.** இலங்கையில் வில்லு புல்நிலங்கள் அதிகளவில் காணப்படும் பகுதிகள்
(1) கல்லோயா, பொலன்னறுவை மற்றும் மதுறுஓயா
(2) சிங்கராஜா, பண்டாரவளை மற்றும் வெலிமடை
(3) அக்கரப்பத்தனை, அம்பேவெல மற்றும் கந்தப்பொல
(4) சோமாவதிய, மன்னம்பிட்டிய மற்றும் வில்பத்து
(5) சந்ததென்ன, கிக்கிலியாமன மற்றும் நக்கிள்ஸ் (......)

**23.** இலங்கையின் தேசிய தேசப்படத்தின்படி, விக்டோரியா, ரந்தனிகல மற்றும் ரன்டெம்பே பகுதிகள் எவ்வாறு பாகுபடுத்தப்படுகின்றன?
(1) தேசிய பூங்காக்கள் (2) புகலிடங்கள்
(3) இயற்கை ஒதுக்கிடங்கள் (4) காடுகள்
(5) கடும் பாதுகாப்புக்கு உட்பட்ட பகுதிகள் (......)

**24.** இயற்கை இடர்களின் கீழ் காணப்படும் 'பல்வகை இடர்' சூழலை விவரிக்கும் தெரிவுகளில் ஒன்று எது?
(1) பல பிரதேசங்களை ஒரே நேரத்தில் பாதிக்கும் தனியொரு இடர்
(2) ஒரே பகுதியில் இரண்டு அல்லது அதிகமான வெவ்வேறு இடர்கள் தொடர்ச்சியாக நிகழ்தல்
(3) குறுகிய காலத்தில் ஒரே அமைவிடத்தில் தனியொரு இடர் மீண்டும் மீண்டும் நிகழ்தல்
(4) வெவ்வேறு நாடுகளில் ஒரே இடர் சுயாதீனமாக நிகழ்தல்
(5) பல வருடங்களுக்கு மேலாக தனியொரு இடர் மீண்டும் மீண்டும் நிகழ்தல் (......)

**25.** பசிபிக் சமுத்திரத்தில் சூடான மேற்பரப்பு வெப்பநிலையுடன் இணைந்து காணப்படும் காலநிலைத் தோற்றப்பாட்டின் பெயர் யாது?
(1) லா-நினா (2) டித்வா (3) எல்-நினோ
(4) ஹரிக்கேன் (5) பெங்கல் (......)

**26.** ஐக்கிய நாடுகளின் வருடாந்த அறிக்கையின்படி, உலக குடித்தொகை 2022 இல் எத்தனை பில்லியனாகக் காணப்பட்டது?
(1) 06 (2) 07 (3) 08 (4) 09 (5) 10 (......)

**27.** நாடொன்றின் குடித்தொகை இயக்கத்துக்குப் பங்களிக்கும் மூன்று காரணிகளைக் குறித்துக்காட்டும் தெரிவு எது?
(1) பிறப்புகள், இறப்புகள் மற்றும் இடப்பெயர்வு
(2) கருவளம், இடப்பெயர்வு மற்றும் இறப்புகள்
(3) பிறப்புகள், இறப்புகள் மற்றும் கருவளம்
(4) வளர்ச்சி, கருவளம் மற்றும் இடப்பெயர்வு
(5) வளர்ச்சி, இறப்புகள் மற்றும் இடப்பெயர்வு (......)

**28.** உலகின் பிரதான நான்கு குடித்தொகைச் செறிவுகளைக் குறித்துக்காட்டும் தெரிவு எது?
(1) தென்கிழக்கு ஆசியா, மேற்கு ஆசியா, மத்திய ஆசியா மற்றும் தென் அமெரிக்கா
(2) கிழக்கு ஆசியா, தென் ஆசியா, மத்திய ஆசியா மற்றும் வட அமெரிக்கா
(3) கிழக்கு ஆசியா, தென் ஆசியா, தென்கிழக்கு ஆசியா மற்றும் ஐரோப்பா
(4) வட ஆசியா, மேற்கு ஆசியா, தென்கிழக்கு ஆசியா மற்றும் தென் ஆபிரிக்கா
(5) தென் ஆசியா, மேற்கு ஆசியா, தென்கிழக்கு ஆசியா மற்றும் அவுஸ்திரேலியா (......)

**29.** பின்வருவனவற்றுள் எது இலங்கையின் வரண்ட வலயத்தில் காணப்படும் கிராமியக் குடியிருப்புகளின் பிரதான மூன்று கூறுகளைப் எடுத்துக்காட்டுகின்றது?
(1) சேனைச் செய்கை, குளம் மற்றும் கிராம நிலையம்
(2) குளம், உயர்நிலம் மற்றும் கிராம நிலையம்
(3) உயர்நிலம், நெல்நிலம் மற்றும் பெருந்தோட்டம்
(4) கிராம நிலையம், பெருந்தோட்டம் மற்றும் காடு
(5) குளம், நெல் வயல் மற்றும் உயர்நிலம் (......)

[பக். 5 ஐப் பார்க்க

**30.** பின்வரும் தெரிவுகளில் எது ஐரோப்பாவின் 'கோல்டன் பனானா' (Golden Banana) என்பதனைச் சரியாக இனங்காட்டுகிறது?
(1) போக்குவரத்துக்கான ஒரு நுழைவாயில்
(2) ஒரு பிரதான கைத்தொழில் பிரதேசம்
(3) ஒரு விவசாயப் பிரதேசம்
(4) ஒரு சுரங்கமறுத்தல் பிரதேசம்
(5) மிக உயர்வாக நகரமயமாக்கப்பட்ட ஒரு பகுதி (……)

**31.** தற்போது வெளியிடப்பட்ட தரவுகளின்படி, கொழும்பு மாவட்டத்தின் நகரக் குடித்தொகையின் சதவீதம் எந்த வகைக்குள் அமைந்துள்ளது?
(1) 30 - 39 (2) 40 - 49 (3) 50 - 59
(4) 60 - 69 (5) 70 மற்றும் அதற்குமேல் (……)

**32.** பின்வருவனவற்றுள் சேதன விவசாயத்தின் பிரதான பண்புகளைக் குறித்துக்காட்டுவது எது?
(1) நிலைபேண் விவசாயத்தினை முதன்மைப்படுத்துகின்றது.
(2) பசுமைப் புரட்சியின் ஒரு நோக்கமாகும்.
(3) இயந்திரமயமாக்கத்தினைச் செறிவாகப் பயன்படுத்துகின்றது.
(4) விவசாய உற்பத்தியை அதிகளவில் முதன்மைப்படுத்துகின்றது.
(5) நவீன நீர் முகாமைத்துவத்தைப் பயன்படுத்துகின்றது. (……)

**33.** பின்வருவனவற்றுள் பசுமைப் புரட்சியின் சாதகமான தாக்கத்தினை எடுத்துக் காட்டுவது எது?
(1) குறைவடைந்த உற்பத்திச் செலவு
(2) மரபுரீதியான அறிவினைப் பாதுகாத்தல்
(3) மண்ணின் இயற்கை வளத்தின் மேம்பாடு
(4) அதிகரித்த உயிர்ப்பல்வகைமை
(5) அதிகரித்த பயிர் விளைச்சல் (……)

**34.** பின்வருவனவற்றுள் எது, இலங்கையின் பிழைப்பூதிய விவசாயத்தின் அடிப்படைப் பண்பாகக் காணப்படுகின்றது?
(1) தலா ஒருவருக்கான விவசாய உற்பத்தி மிக உயர்வு
(2) உற்பத்தியானது உள்ளூர் நுகர்வுக்குப் பயன்படுத்தப்படல்
(3) இயந்திரங்களின் பயன்பாடு செறிவாகக் காணப்படல்
(4) பாரிய அளவுத்திட்டத்தில் நிலவுடைமைகள் காணப்படல்
(5) முதல் மூலதனம் உயர்வாக இருத்தல் (……)

**35.** பின்வருவனவற்றுள் பெற்றோலியம் என்பது அத்தியாவசியமான ஓர் இயற்கைச் சக்தி வளமாக ஏன் காணப்படுகின்றது என்பதைச் சரியாக விவரிப்பது எது?
(1) இது புவியின் ஒரு புவியியல் பிரதேசத்தில் மட்டும் காணப்படுகின்றது.
(2) இது புதுப்பிக்கக்கூடிய வளமாக மட்டுப்படுத்தப்பட்ட நிரம்பலைக் கொண்டது.
(3) இது போக்குவரத்துக்கான பிரதான சக்தி மூலமாகக் காணப்படுகின்றது.
(4) இது வீட்டின் சக்தித் தேவை முழுவதையும் வழங்குகின்றது.
(5) இதனை நுகரும்போது பச்சைவீட்டு வாயுக்களின் உற்பத்தி குறைவாக இடம்பெறுகின்றது. (……)

**36.** இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் பிரதான கைத்தொழில் கனியங்கள் மூன்று
(1) நிலக்கரி, அபதையிற் மற்றும் செம்பு
(2) காரீயம், அபதையிற் மற்றும் கனிய மணல்
(3) காரீயம், அபதையிற் மற்றும் மாணிக்கக்கல்
(4) கனிய மணல், செம்பு மற்றும் மாணிக்கக்கல்
(5) கனிய மணல், செம்பு மற்றும் நிலக்கரி (……)

**37.** இலங்கையில் மணல் மற்றும் இரத்தினக்கல் அகழ்வினால் உருவாக்கப்படும் குழிகளுடன் நேரடியான தொடர்பைக் கொண்டுள்ள மனிதச் சுகாதாரத் தாக்கமொன்று
(1) வாழ்நிலங்களின் இழப்பு
(2) நிலச் சரிவுகளின் அதிகரிப்பு
(3) தரைநீரின் வீழ்ச்சி
(4) ஆற்று நீர் மாசடைதல்
(5) நுளம்பு வளரும் பகுதிகளில் ஏற்பட்ட அதிகரிப்பு (……)

**38.** பின்வருவனவற்றுள் இலங்கையின் அந்நியச் செலாவணி வருமானத்தில் கைத்தொழில் துறையின் தற்போதைய பங்களிப்பினை எடுத்துக் காட்டுவது எது?
(1) 35% க்குக் கீழ் (2) 40% - 50% (3) 55% - 65%
(4) 70% - 80% (5) 85% க்கு மேல் (……)

[பக். 6 ஐப் பார்க்க

**39.** பின்வருவனவற்றுள் பூகோளமயமாக்கத்தினால் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கு ஏற்படக்கூடிய பிரதான பொருளாதார அனுகூலமாகக் கருதப்படுவது எது?
(1) நாடுகளுக்கிடையே அதிகரித்த வருமான ஒப்புரவின்மை.
(2) வெளிநாட்டு நேரடி முதலீட்டுக்கான அதிகரித்த வாய்ப்பு
(3) உயர்தரத் தொழில்நுட்பத்திலும் பார்க்கக் குறைந்த தரத் தொழில்நுட்பத்தைப் பெறுதல்.
(4) போட்டி காரணமாக உள்ளூர் பொருட்களின் விலைகள் குறைவடைதல்.
(5) சந்தையில் முதலீட்டுப் பொருட்களிலும் பார்க்க நுகர்வுப் பொருட்கள் அதிகளவு காணப்படல். (……)

**40.** உலகின் பிராந்திய அமைப்புகளை உருவாக்குவதன் பிரதான நோக்கம்
(1) பிரதேசத்திற்குள்ளே கலாச்சார அடையாளங்களை இல்லாதொழித்தல்.
(2) அயல் நாடுகளின் மீது இராணுவ அதிகாரத்தினை ஸ்தாபித்தல்.
(3) அங்கத்துவ நாடுகளுக்கிடையே ஒன்றிணைந்த அரசாங்கத்தை உருவாக்கல்.
(4) பிரதேச சவால்களை ஒத்துழைப்பினூடாகத் தீர்த்து வைத்தல்.
(5) அங்கத்துவம் அல்லாத நாடுகளுடன் வர்த்தகத்தை மேம்படுத்தல். (……)

* *

[பக். 7 ஐப் பார்க்க

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2026
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2026
General Certificate of Education (Adv. Level) Examination, 2026

ප්‍රශ්න අංකය / வினா இல. / Question No. **2**

භූගෝල විද්‍යාව I / புவியியல் I / Geography I

II කොටස / பகுதி II / PART II

22 STE I

විභාග අංකය / சுட்டெண் / Index No ..............................



ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2026
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2026
General Certificate of Education (Adv. Level) Examination, 2026

| | |
|---|---|
| භූගෝල විද්‍යාව | I |
| புவியியல் | I |
| Geography | I |

22 T I

**அறிவுறுத்தல்கள் :**

※ பகுதி **II** இல் உள்ள **இரண்டு** வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.
※ பகுதி **III** இல் **நான்கு** வினாக்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் **இரண்டு** வினாக்களைத் தெரிவுசெய்து விடையளித்தல் வேண்டும்.
※ இவ்வினாத்தாளுக்கு விடையளிப்பதற்காக 1 : 50 000 அளவுத்திட்டத்தில் அமைந்த இடவிளக்கப் படத்தின் ஒரு பகுதியும் உலகப் புறவுருவப் படமும் வரைபுத்தாள்கள் இரண்டும் வழங்கப்படும்.

## பகுதி II

1. இலங்கை நில அளவைத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட 1:50 000 அளவுத்திட்டத்தில் அமைந்த தம்புள்ள இடவிளக்கப் படத்தின் ஒரு பகுதி உமக்குத் தரப்பட்டுள்ளது. அதில் சமவுயரக் கோடுகள் **20 மீற்றர்கள்** இடைவெளியில் காட்டப்பட்டுள்ளன. இப் படத்தினைப் பயன்படுத்திப் பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

குறிப்பு :
※ விடைத்தாளில் தொடர்புடைய **வினா இலக்கத்தினையும்** அதன் உப பிரிவுகளின் **இலக்கங்களையும்** தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.
※ **இடவிளக்கப் படத்தின் மேல் விடைகள் எழுதப்படக்கூடாது.**
※ தரப்பட்டுள்ள இடவிளக்கப் படத்தினை உமது விடைத்தாளுடன் இணைக்க **வேண்டாம்.**

(i) எழுத்து Ⓐ இனால் குறித்துக் காட்டப்பட்டுள்ள தரைத்தோற்ற அம்சத்தினைப் பெயரிடுக. (01 புள்ளி)

(ii) கோடுகள் Ⓑ - Ⓒ மற்றும் Ⓓ - Ⓔ ஆகியவற்றினால் முறையே குறித்துக் காட்டப்பட்டுள்ள **இரண்டு** நிலவுருவங்களைப் பெயரிடுக. (02 புள்ளிகள்)

(iii) படப்பகுதியில் Ⓕ எழுத்தினால் குறித்துக் காட்டப்பட்டுள்ள அம்சம் யாது? (01 புள்ளிகள்)

(iv) எழுத்துக்கள் Ⓖ மற்றும் Ⓗ ஆகியவற்றினால் முறையே குறித்துக் காட்டப்பட்டுள்ள **இரண்டு** நிர்வாக எல்லைகளைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(v) கந்தளம (Kandalama) குளத்தின் அணைக்கட்டின் நீளத்தினைக் கிலோமீற்றரில் கணிப்பிடுக. (01 புள்ளிகள்)

(vi) நாற்பக்கல் Ⓚ இல் அமைந்து காணப்படும் ஏதாவது **இரண்டு** அரசாங்க நிறுவகங்களைப் பெயரிடுக. (01 புள்ளிகள்)

(vii) படப்பகுதியின் முனைப்பான அம்சங்களைக் கீழ்வரும் **மூன்று** தலைப்புகளில் சுருக்கமாக விவரிக்குக.
(a) வீதி வலைப்பின்னல் (b) காடு மற்றும் புதர் (c) குடியிருப்புகள் (06 புள்ளிகள்)

(viii) படப்பகுதியில் நெற்பயிர்ச்செய்கைப் பரம்பலினைப் பின்வரும் **மூன்று** காரணிகளுடன் தொடர்புபடுத்தி ஆராய்க.
(a) தரையுயர்ச்சி (b) இயற்கை வடிகாலமைப்பு (c) நீர்ப்பாசன நீர் விநியோகம் (06 புள்ளிகள்)

(மொத்தம் = 20 புள்ளிகள்)

2. தரப்பட்டுள்ள உலகப் படத்தில், நியமக் குறியீடுகளையும், நிறங்களையும் பயன்படுத்திப் பின்வருவனவற்றைக் **குறித்துப் பெயரிடுக.**
- நைகர் ஆறு
- நெடுங்கோடு $80^{0}$.00E
- மத்தியதரைக் கடல்
- ரிற்ரிக்காக்கா ஏரி
- றொக்கி மலைத் தொடர்கள்
- பங்களாதேஷ்
- கிறீன்லாந்து
- ஸ்ரெப்ஸ் புல்நிலம்
- அவுஸ்திரேலியாவின் தலைநகரம்
- 2026 இன் ஆரம்பத்தில் ஈரானுக்கும் ஐக்கிய அமெரிக்காவுக்கும் இடையிலான பிணக்குக் காரணமாக கப்பற் போக்குவரத்துக்குத் தடை செய்யப்பட்ட நீரிணை (10 புள்ளிகள்)

[பக். 8 ஐப் பார்க்க

## பகுதி III

**3.** (i) படம் என்பதினால் கருதப்படுவது யாது? (02 புள்ளிகள்)

(ii) இடவிளக்கப்படங்களின் விசேடமான அம்சங்கள் **இரண்டினைச்** சுருக்கமாக விவரிக்குக.(04 புள்ளிகள்)

(iii) கருப்பொருட் படங்களின் **மூன்று** பயன்பாடுகளைச் சுருக்கமாக விவரிக்குக. (03 புள்ளிகள்)

(iv) அச்சிடப்பட்ட படங்களுக்கும், இலக்கமுறைப் படங்களுக்கும் இடையில் காணப்படும் **மூன்று** வேறுபாடுகளை ஒப்பீட்டுரீதியாக விளக்குக. (06 புள்ளிகள்)

**4.** (i) தொலையுணர்வுத் தரவுகளைப் பெற்றுக்கொள்வதற்குப் பயன்படுத்தப்படும் **நான்கு** மூலங்களைப் பெயரிடுக. (02 புள்ளிகள்)

(ii) தொலையுணர்வு மேடைகளின் **மூன்று** வகைகளைச் சுருக்கமாக விவரிக்குக. (03 புள்ளிகள்)

(iii) தொலையுணர்வுத் தொழில்நுட்பத்தின் **மூன்று** பயன்பாடுகளைப் பொருத்தமான உதாரணங்களுடன் பரிசீலிக்குக. (06 புள்ளிகள்)

(iv) அபிவிருத்திச் செயன்முறையில் தொலையுணர்வுத் தொழில்நுட்பத்தின் பிரயோகம் தொடர்பாக இலங்கை எதிர்கொள்ளும் **இரண்டு** சவால்களை ஆராய்க. (04 புள்ளிகள்)

**5.** **அட்டவணை 01** இல் இலங்கையின் யால பருவத்தில் 2000-2025 காலத்துக்கான சராசரி நெல் விளைச்சல் எடுத்துக் காட்டப்படுகிறது. தரப்பட்டுள்ள தரவுகளைப் பயன்படுத்திப் பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

**அட்டவணை 01:** இலங்கையில் யால பருவ காலத்திற்குரிய சராசரி நெல் விளைச்சல் (கிலோகிராமில் / ஹெக்டயர்) **(2000-2025)**

| வருடம் | சராசரி நெல் விளைச்சல் |
|---|---|
| 2000 | 3697 |
| 2001 | 4119 |
| 2002 | 3773 |
| 2003 | 3709 |
| 2004 | 4244 |
| 2005 | 3976 |
| 2006 | 4263 |
| 2007 | 4543 |
| 2008 | 4195 |
| 2009 | 4186 |
| 2010 | 4444 |
| 2011 | 4347 |
| 2012 | 4145 |

| வருடம் | சராசரி நெல் விளைச்சல் |
|---|---|
| 2013 | 4408 |
| 2014 | 4204 |
| 2015 | 4527 |
| 2016 | 4417 |
| 2017 | 4291 |
| 2018 | 4683 |
| 2019 | 4696 |
| 2020 | 4770 |
| 2021 | 4691 |
| 2022 | 3407 |
| 2023 | 4128 |
| 2024 | 4599 |
| 2025 | 4820 |

மூலம் : *Department of Census and Statistics, 2026*

(i) மீடிறன் பல்கோணி என்பதினால் கருதப்படுவது யாது? (02 புள்ளிகள்)

(ii) கீழே தரப்பட்டுள்ள வகுப்பு ஆயிடைகளைப் பயன்படுத்தி **அட்டவணை 01** இல் தரப்பட்டுள்ள தரவுகளுக்கான மீடிறன் பரம்பல் அட்டவணையொன்றினைத் தயாரிக்குக.
(3400 - 3649, 3650 - 3899, 3900 - 4149, 4150 - 4399, 4400 - 4649, 4650 - 4899) (03 புள்ளிகள்)

(iii) மேலே 5 (ii) இல் தயாரிக்கப்பட்ட மீடிறன் பரம்பல் அட்டவணையைப் பயன்படுத்தி இழைவரையம் ஒன்றினையும் மீடிறன் பல்கோணியையும் வரைக. (08 புள்ளிகள்)

(iv) மீடிறன் பல்கோணியினால் எடுத்துக்காட்டப்பட்ட, யால பருவத்துக்குரிய சராசரி நெல் விளைச்சலில் காணப்படும் **இரண்டு** பண்புகளைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

[பக். 9 ஐப் பார்க்க

**6.** **அட்டவணை 02** இல் இலங்கையின் வயதுப் பிரிவு மற்றும் பால் அடிப்படையிலான சனத்தொகை எடுத்துக் காட்டப்படுகின்றது. தரப்பட்டுள்ள தரவுகளைப் பயன்படுத்திப் பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

**அட்டவணை 02:** வயதுப் பிரிவு மற்றும் பால் ரீதியான இலங்கையின் சனத்தொகை, 2025 (ஆயிரத்தில்)

| வயதுப் பிரிவு | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|
| 0 - 9 | 1398 | 1371 | 2769 |
| 10 - 19 | 1787 | 1739 | 3526 |
| 20 - 29 | 1451 | 1526 | 2977 |
| 30 - 39 | 1386 | 1478 | 2864 |
| 40 - 49 | 1515 | 1575 | 3090 |
| 50 - 59 | 1253 | 1362 | 2615 |
| 60 - 69 | 993 | 1178 | 2171 |
| 70 - 79 | 559 | 758 | 1317 |
| 80+ | 158 | 269 | 427 |

மூலம் : *Registrar General's Department, 2025 (Estimated)*

(i) **அட்டவணை 02** இல் தரப்பட்டுள்ள சனத்தொகைத் தரவுகளைப் பயன்படுத்தி கூம்பக வரைபு (பிரமிட்) ஒன்றினை வரைக. (08 புள்ளிகள்)

(ii) உம்மால் அமைக்கப்பட்ட கூம்பக வரைபில் 0-19, 20-59 மற்றும் 60 மற்றும் அதற்குமேல் உள்ள இலங்கையின் ஒவ்வொரு வயதுப் பிரிவிலும் காணப்படும் முக்கியமான பண்பு **ஒவ்வொன்று** வீதம் சுருக்கமாக விவரிக்குக. (03 புள்ளிகள்)

(iii) மேலேயுள்ள சனத்தொகைத் தரவுகளை முன்வைப்பதற்கு கூம்பக வரைபினைப் பயன்படுத்துவதினால் ஏற்படும் **நான்கு** அனுகூலங்களைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

❊ ❊ ❊

AL/2026/22/T-II

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව/முழுப் பதிப்புரிமையுடையது/All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2026
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2026
General Certificate of Education (Adv. Level) Examination, 2026

භූගෝල විද්‍යාව II
புவியியல் II
Geography II

22 T II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

**வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

**அறிவுறுத்தல்கள் :**

※ ஒவ்வொரு பகுதியிலிருந்தும் குறைந்தபட்சம் **இரண்டு** வினாக்களையேனும் தெரிவுசெய்து, எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

## பகுதி I - பௌதிகப் புவியியல்

**1.** (i) புவித் - தொகுதி என்பதனால் கருதப்படுவது யாது? (02 புள்ளிகள்)

(ii) உயிர்க்கோளத்தின் முக்கிய பண்புகள் **மூன்றினைச்** சுருக்கமாக விவரிக்குக. (06 புள்ளிகள்)

(iii) வரைபடம் ஒன்றின் உதவியுடன் உயிர்க்கோளத்துக்கும் ஏனைய மூன்று உப - தொகுதிகளுக்கும் இடையில் காணப்படும் இடைத்தாக்கத்தினை விவரிக்குக. (06 புள்ளிகள்)

(iv) உயிர்க்கோளத்தினை மோசமாகப் பாதிக்கும் **மூன்று** பௌதிகக் காரணிகளைப் பரிசீலிக்குக. (06 புள்ளிகள்)

**2.** (i) பள்ளத்தாக்குப் பனிக்கட்டியாறுகள் என்பதனால் கருதப்படுவது யாது? (02 புள்ளிகள்)

(ii) மலைப் பகுதிகளில் காணப்படும் பள்ளத்தாக்குப் பனிக்கட்டியாறுகளின் **மூன்று** செயற்பாடுகளைச் சுருக்கமாக விவரிக்குக. (06 புள்ளிகள்)

(iii) கீழே வரைபடம் 01 இல் A, B, C, D, E, F எனக் குறித்துக் காட்டப்பட்டுள்ள பள்ளத்தாக்குப் பனிக்கட்டியாற்றின் **ஆறு** நிலவுருவங்களைப் பெயரிடுக. (06 புள்ளிகள்)




வரைபடம் 01

(iv) பின்வரும் **மூன்று** பனிக்கட்டியாற்று நிலவுருவங்களை அவற்றின் அமைவிடத்தின் அடிப்படையில் பொருத்தமான புனையா வரைபடங்களுடன் விளக்குக.
(a) பக்கப் பனிக்கட்டியாற்றுப் படிவு (b) இடைப் பனிக்கட்டியாற்றுப் படிவு
(c) முனைப் பனிக்கட்டியாற்றுப் படிவு (06 புள்ளிகள்)

**3.** (i) அனர்த்த முகாமைத்துவம் என்பதனால் கருதப்படுவது யாது? (02 புள்ளிகள்)

(ii) இலங்கையில் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் **மூன்று** தொழிற்பாடுகளைச் சுருக்கமாக விளக்குக. (06 புள்ளிகள்)

(iii) அனர்த்த முகாமைத்துவ வட்டத்தில் காணப்படும் **நான்கு** பிரதான கட்டங்களை வரைபடமொன்றுடன் விவரிக்குக. (06 புள்ளிகள்)

(iv) இலங்கையில் 'டித்வா' அனர்த்தத்தின்போதும் அதன் பின்னரும் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட **மூன்று** நடவடிக்கைகளை ஆராய்க. (06 புள்ளிகள்)

[பக். 2 ஐப் பார்க்க

Past Papers Wiki



4. (i) உயிர்த்திணிவு என்பதனால் கருதப்படுவது யாது? (02 புள்ளிகள்)

(ii) உலகில் உயிர்த்திணிவின் பல்வகைத்தன்மையில் செல்வாக்குச் செலுத்தும் **மூன்று** பிரதான காரணிகளைச் சுருக்கமாக விவரிக்குக. (06 புள்ளிகள்)

(iii) உலகில் அயன மழைக் காடுகளின் உயிர்த்திணிவில் காணப்படும் முனைப்பான அம்சங்கள் **மூன்றினை** விளக்குக. (06 புள்ளிகள்)

(iv) மானிட நடவடிக்கைகளின் காரணமாக அயன மழைக் காடுகள் எதிர்நோக்கும் **மூன்று** பிரச்சினைகளைக் கலந்துரையாடுக. (06 புள்ளிகள்)

## பகுதி II - மானிடப் புவியியல்

5. **அட்டவணை 01** இல் உலகின் பிரதான பிரதேசங்களின்படி 60 வயதுக்கு மேற்பட்ட முதியோர் குடித்தொகைப் பரம்பல், 2017 ஆம் ஆண்டுக்கும், 2050 ஆம் ஆண்டுக்குரிய எதிர்வுகூறல் தரவுகளுடனும் எடுத்துக் காட்டப்படுகின்றது. தரவுகளைப் பயன்படுத்திப் பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

**அட்டவணை 01 : உலகின் பிரதான பிரதேசங்களின்படி வயது 60 வருடங்களுக்கு மேற்பட்ட முதியோர் குடித்தொகைப் பரம்பல் 2017 மற்றும் 2050**

| பிரதான பிரதேசங்கள் | வயது 60 வருடங்களுக்கு மேற்பட்ட முதியோர் குடித்தொகை | | | |
|---|---|---|---|---|
| | 2017 | | 2050 (எதிர்வுகூறப்பட்டது) | |
| | மில்லியனில் | சதவீதம் | மில்லியனில் | சதவீதம் |
| ஆபிரிக்கா | 68.8 | 7.2 | 225.8 | 10.9 |
| ஆசியா | 549.2 | 57.1 | 1273.2 | 61.2 |
| ஐரோப்பா | 183.0 | 19.0 | 247.2 | 11.9 |
| வட அமெரிக்கா | 78.4 | 8.1 | 122.8 | 5.9 |
| லத்தீன் அமெரிக்கா மற்றும் கரீபியன் | 76.0 | 7.9 | 198.2 | 9.5 |
| ஓசானியா | 6.9 | 0.7 | 13.3 | 0.6 |
| **உலகம்** | **962.3** | **100.0** | **2080.5** | **100.0** |

மூலம் : *United Nations(2018)*

(i) வயது முதிர்ந்தோர் சுட்டெண் என்பதினால் கருதப்படுவது யாது? (02 புள்ளிகள்)

(ii) 2017 இல் உலகின் பிரதான பிரதேசங்களில் வயது 60 வருடங்களுக்கு மேற்பட்ட முதியோரின் குடித்தொகைப் பரம்பலில் காணப்படும் முக்கியமான அம்சங்கள் **மூன்றினை** விவரிக்குக. (06 புள்ளிகள்)

(iii) 2017 உடன் ஒப்பிடும்போது 2050 இல் உலகின் பிரதான பிரதேசங்களில் வயது 60 வருடங்களுக்கு மேற்பட்ட முதியோர் குடித்தொகைப் பரம்பலில் ஏற்பட்டுள்ள **மூன்று** மாற்றங்களை விவரிக்குக. (06 புள்ளிகள்)

(iv) முதியோர் குடித்தொகையின் அதிகரிப்புக் காரணமாக இலங்கை எதிர்கொள்ளும் **மூன்று** சவால்களைப் பரிசீலிக்குக. (06 புள்ளிகள்)

6. (i) உலகில் காணப்படும் **இரண்டு** பிரதான குடியிருப்புப் பாங்குகளைப் பெயரிடுக. (02 புள்ளிகள்)

(ii) ஒழுங்கமைந்த குடியிருப்புக்களின் **மூன்று** உப பிரிவுகளை உதாரணங்களுடன் விவரிக்குக. (06 புள்ளிகள்)

(iii) கிராமியக் குடியிருப்புக்களில் காணப்படும் பொதுவான பண்புகள் **மூன்றினைக்** கலந்துரையாடுக. (06 புள்ளிகள்)

(iv) இலங்கையில் காணப்படும் மகாவலிக் குடியிருப்புகளின் **நான்கு** படிமுறை நிலைகளை விளக்குக. (06 புள்ளிகள்)

[பக். 3 ஐப் பார்க்க

Past Papers Wiki



7. 2014 மற்றும் 2022 இல் உலகின் இரும்புத் தாது உற்பத்திப் பரம்பல் அட்டவணை 02 இல் கீழே எடுத்துக்காட்டப்படுகின்றது. தரவுகளைப் பயன்படுத்திப் பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

அட்டவணை 02 : உலகின் இரும்புத் தாது உற்பத்தி 2014 மற்றும் 2022 (மில்லியன் தொன்கள்)

| நாடு | உலக இரும்புத் தாது உற்பத்தி | | | |
|---|---|---|---|---|
| | 2014 | | 2022 | |
| | மில்லியன் தொன்கள் | சதவீதம் | மில்லியன் தொன்கள் | சதவீதம் |
| அவுஸ்திரேலியா | 767 | 32.9 | 880 | 33.9 |
| பிரேசில் | 411 | 17.6 | 410 | 15.9 |
| சீனா | 369 | 15.8 | 380 | 14.6 |
| இந்தியா | 129 | 5.5 | 230 | 8.8 |
| ரஷியா | 102 | 4.4 | 100 | 3.8 |
| தென் ஆபிரிக்கா | 78 | 3.3 | 61 | 2.3 |
| ஐக்கிய அமெரிக்கா | 58 | 2.5 | 46 | 1.8 |
| ஈரான் | 45 | 1.9 | 50 | 1.9 |
| கனடா | 41 | 1.8 | 68 | 2.6 |
| ஏனைய நாடுகள் | 330 | 14.3 | 375 | 14.4 |
| **உலக மொத்தம்** | **2330** | **100.0** | **2600** | **100.0** |

மூலம் :*USGS Mineral Commodity Summaries, 2024*

(i) உற்பத்திக் கைத்தொழில்களில் இரும்புத் தாது ஒரு முக்கியமான மூலப்பொருளாக ஏன் கருதப்படுகின்றது என்பதற்கான **இரண்டு** காரணங்களைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) 2014 இல் உலகின் இரும்புத் தாது உற்பத்தியின் பரம்பல் பாங்கில் காணப்படும் முனைப்பான அம்சங்கள் **மூன்றினை** விவரிக்குக. (06 புள்ளிகள்)

(iii) 2014 உடன் ஒப்பிடும்போது 2022 இல் உலகின் இரும்புத் தாது உற்பத்தியில் ஏற்பட்டுள்ள **மூன்று** மாற்றங்களை விளக்குக. (06 புள்ளிகள்)

(iv) உலகின் இரும்புத் தாது அகழ்வுக் கைத்தொழிலுடன் இணைந்து காணப்படும் **மூன்று** பிரச்சினைகளைப் பரிசீலிக்குக. (06 புள்ளிகள்)

8. (i) இலங்கைக்கு வருகைதரும் நபரொருவர் எந்த அளவுகோலின் கீழ் சுற்றுலாப் பயணியாகக் கருதப்படுவார் என்பதைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) இலங்கைக்கு வருவதற்கு சர்வதேச சுற்றுலாப் பயணிகளில் செல்வாக்குச் செலுத்தும் பிரதான **மூன்று** காரணங்களை ஆராய்க. (06 புள்ளிகள்)

(iii) இலங்கையில் சர்வதேச சுற்றுலாப் பயணிகளுக்கு வழங்கப்படும் பிரதான சுற்றுலா வகைகள் **மூன்றினை** ஆராய்க. (06 புள்ளிகள்)

(iv) இலங்கையில் சுற்றுலாக் கைத்தொழிலை விருத்தி செய்வதற்கு அண்மைக் காலத்தில் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டு வரும் **மூன்று** நடவடிக்கைகளை விளக்குக. (06 புள்ளிகள்)

* * *

PAST PAPERS WIKI

අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2026
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2026
General Certificate of Education (Adv. Level) Examination, 2026

**22 I** භූගෝල විද්‍යාව I / புவியியல் I / **Geography I**

22027




SCALE 1 : 50 000

සමෝච්ච රේඛා අන්තරය මීටර 20
சமவுயரக்கோட்டு இடைவெளி 20 மீற்றர்
Contour Line Interval 20 metre

WWW.PastPapers.WiKi
Downloaded From Past Papers WiKi - Sri Lanka's Largest Past Papers Library